கூடுதல் மகிளா நீதிமன்றம் (நீதித்துறை நடுவர் நிலை),

திருவாரூர்.

**CC.No. 25/2022**

2024-ம் ஆண்டு நவம்பர் மாதம் 20 -ம் நாள் குற்றமுறையீட்டாளர்/எதிரி தரப்பில் சாட்சி அ.சா. 2 ன் சாட்சிய வாக்குமூலம் 1969-ம் சட்டத்தின்படி குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களால் ஆணையுறுதி செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | உஷா | வயது | 39 |
| கணவர் பெயர் | ரமேஷ்குமார் | ஜாதி | |
| தொழில் | விவசாயம் | மதம் | |
| ஊர் | சீதக்கமங்கலம், உக்கடை | தாலுக்கா | |

( 1வது எதிரி ஆஜரில் உள்ளார். 2 முதல் 4 எதிரிகள் ஆஜரில் இல்லை. 317 ன் கீழ் மனு அனுமதிக்கப்படுகிறது. எதிரிகள் தரப்பில் வழக்கறிஞர் முன்னிலை)

**முதல் விசாரணை (அரசு தரப்பில்)**

நான் தற்போது சீதக்கமங்கலம், உக்கடையில் வசித்து விவசாயம் செய்து வருகிறேன். அசா.1 எனது தங்கை ஆவார். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். எதிரிகள் பழனி, குணா, வசந்தி ஆகியோர்களை தெரியும். எனது குடும்ப பிரச்சனை ஒரு பக்கம் நடந்து வருகிறது. எனது கணவர் என்னுடன் இல்லை. நானும், எனது தங்கையும் தாய் மாமன் மகன்களை திருமணம் செய்து கொண்டோம். எங்கள் மாமியார் எங்கள் இருவரையும் வாழ வைக்கவில்லை. இதனால் கோபுராஜன், பழனி, மாரிமுத்து ஆகியோர் ஒன்று சேர்ந்து கொண்டார்கள். மாரிமுத்துவின் மகன்களை தான் நானும், எனது தங்கையும் திருமணம் செய்து கொண்டோம். எனது வீட்டிற்கு அருகிலேயே எங்கள் தாத்தா குஞ்சுதபாதம் அமைத்த போர்செட் பழுது அடைந்த நிலையில் இருந்தது. நான் எனது நகைகளை அடகு வைத்து மேற்படி போர்செட்டை சீர் செய்தேன். எங்கள் நிலங்கள்எல்லாம் குடும்ப பிரச்சனை காரணமாக தரிசாக கிடந்தது . ஆனால் மேற்படி போர் செட்டில் இருந்து ஆஜர் எதிரி அவருடைய நிலத்திற்கு நீர் பாய்ச்சிக்கொண்டார். அவ்வாறு தண்ணீர் பாய்த்து கொள்வதற்கு ஆஜர் எதிரி பணம் எதுவும் கொடுக்கவில்லை. மாணிக்கம் என்பவர் சாகுபடி பிடித்திருந்தார். அவருக்காக கோபுராஜன் மேற்படி போர்செட்டில் இருந்து தண்ணீர் பாய்ச்சிக்கொண்டிருந்தார். அதனால் நானும், அசா.1ம் நாங்கள் போர்செட்டை சரிசெய்துள்ளோம். நீங்கள் தண்ணீர் பாய்ச்சுக்கொள்ள கூடாது என ஆஜர் எதிரியிடம் மூன்று முறை சொன்னோம். அதை காதில் வாங்காமல் ஆஜர் எதிரி மீண்டும் தண்ணீர் பாய்ச்சுக்கொண்டிருந்தார். ஆஜர் எதிரி நாங்கள் சொல்வதை கேட்காததால் மோட்டரின் பியூஸ் கேரியரை பிடித்து வீட்டில் வைத்துக்கொண்டோம். ஆஜர் எதிரி ஒரு எலக்ட்ரீசியன் மூலம் அதை சரிசெய்து தண்ணீர் பாய்ச்சிக்கொண்டார். அவ்வாறு செய்யக்கூடாது மோட்டார்

கெட்டுவிடும் என்று ஆஜர் எதிரியிடம் சொன்னோம். அவர் கேட்கவில்லை. 26.10.2020 ம் தேதி 03.00 மணியளவில் ஆஜர் எதிரி மற்றும் எதிரிகள் பழனி, குணா, வசந்தி என்னையும், எனது தங்கையும் கட்டையால் அடித்தார்கள். எனக்கும், அசா.1 க்கும் தலையில் காயம் ஏற்பட்டது. அதை பார்க்க வந்த தம்பி வெங்கட்ராமனின் காது மடலில் அடித்தார்கள். அதானல் காயம் ஏற்பட்டு தையல் போடப்பட்டது. காயம்பட்ட எனது தங்கையும், தம்பியையும் நன்னிலம் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றேன். அங்கிருந்து இருவரையும் மேல்சிகிச்சைக்காக திருவாரூர் அரசு மருத்துவகல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். எனக்கு எதிரிகள் தாக்கியதில் தலையில் உள்காயம் இருந்தது. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

அன்றையதினம் நான் எதிரிகளை அடித்ததாக எதிரிகள் என் மீது புகார் கொடுக்கப்பட்டு அதனடிப்படையில் என் மீதும் வெங்கட்ராமன் மற்றும் மலர்விழி என்பவர்களின் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். எதிரிகளுக்கு ஏற்பட்ட காயம் குறித்து விசாரணை அதிகாரி என்னிடம் கேட்டாரா என்றால் இல்லை. இரண்டு சம்பவமும் ஒரே நேரத்தில் நடந்தது என்றால் சரிதான். எனது தங்கை மலர்விழி மற்றும் எனது தம்பி வெங்கட்ராமன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தபோது எதிரிகளும் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தனர் என்றால் எனக்கு தெரியாது. எனது தாத்தா குஞ்சுதபாதத்திற்கு சொந்தமான போர்செட் மீது அனைவருக்கும் உரிமை உண்டு என்றால் சரிதான். அந்த போர்செட் சம்பந்தமாக உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் தற்போது தாக்கல் செய்துள்ளோம். நானும், எனது சகோதரி மற்றும் சகோதரர் எதிரிகளை அடித்து காயபடுத்தி விட்டு அந்த வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக எதிரிகள் மீது இந்த பொய் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் கூறுவது போல என்னையும், எனது சகோதரியும், எனது சகோதரனும் எதிரிகள் தாக்க வில்லை காயப்படுத்த வில்லை என்றால் சரியல்ல.

S CINTHA
Digitally signed by S CINTHA
DN: cn=S CINTHA, st=TAMIL NADU, c=+91
Date: 2024.11.20 17:56:18 +0530

நீதித்துறை நடுவர்,

கூடுதல் மகளிர் நீதிமன்றம்,

திருவாரூர்